

# பாதுகாப்பான நாடு ...............

# சுபீட்சமான தேசம்

ஜனாதிபதி செயலகம், கொழும்பு 01



## மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் செய்தி

நாடு பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. சவால்களை வென்றெடுப்பதற்கு மக்கள் ஆணையை எனக்கு வழங்கியுள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கள் அதிகமாகும். நாம் மக்களுக்கு முன்வைத்த தேசிய கொள்கைப் பிரகடனமான “நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு” குறித்த எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கியுள்ளது. ஜனாதிபதி செயலகத்தின் பணியாளர் குழாம் தமது பொறுப்பும் பொறுப்புக் கூறலும் மூலம் குறித்த கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களையே நான் எதிர்பார்க்கின்றேன். அதன் மூலம் மக்களுக்கு சுபீட்சத்தை உருவாக்குவதாகும்.

எமது திட்டங்களில் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் சில விடயங்களை மாற்றுவதற்கு நேரிடும். அதாவது, கொவிட் 19 தொற்றால் எதிர்பாராத திடீர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. அதற்காக ஜனாதிபதி செயலகத்தின் பணியாளர் குழாம் வழங்கிய அர்ப்பணிப்புக்கள் எமது எதிர்காலத் திட்டங்களை இலகுவாக்கும் என்பதே எனது கருத்தாகும். இலக்கை எட்டுவதற்கான முயற்சியும் கூட்டாக இயங்கும் தன்மையும் தெளிவாகக் கண்டுகொள்ளக் கூடியதாகவிருந்தது.

கொவிட் 19 தொற்று எமக்குக் கற்பித்த பாடமானது, நாட்டிற்கு இழக்கப்பட்ட பல மணித்தியாலங்களில் பூர்த்தி செய்ய வேண்டிய வேலைகளைக் குறுகிய காலத்தில் குறித்தவாறு நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். அதற்காக ஜனாதிபதி செயலகம் முன்மாதிரியாக இருக்கும் போது ஏனைய நிறுவனங்கள் அதற்கமைய இயங்கும். அதனால் எமது கூட்டு முயற்சிகளால் மக்கள் எதிர்பார்க்கும் விதத்தில் ஜனாதிபதி செயலகத்தின் செயன்முறையைத் தயாரித்துக் கொள்வதற்கு எதிர்வரும் மாதங்களை அர்ப்பணிப்பதற்கு வாய்ப்புக் கிட்டும்.

இச் செயலாற்றுகை அறிக்கை மேலும் வினைத்திறனுடனும் முறையாகவும் செயற்படுவதற்கு ஏதுவாக அமையுமென எதிர்பார்க்கின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு.



## ஜனாதிபதி செயலாளரின் செய்தி

ஜனாதிபதி செயலகம் அரச நிர்வாகத்தின் கேந்திர நிலையமாகும். ஜனாதிபதி அவர்களுக்கு அரச தலைவர், அமைச்சரவைத் தலைவர் என அரசியலமைப்பிற்கு அமைய ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக் கூறல் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக ஜனாதிபதி செயலகம் முழுமையாக செயலாற்றுகின்றது. மேன்மைதங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் மக்கள் ஆணையான ''சுபீட்சத்தின் நோக்கு'' இனை வெற்றிபெறச் செய்வதும் நிறைவேற்றுவதும் ஒட்டுமொத்த அரச சேவையின் பொறுப்பாகும்.

மக்கள் அரச தலைமைத்துவத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை மற்றும் மதிப்பை பாதிக்காமல் செயற்படுவதற்கு ஜனாதிபதி செயலகம் கடமைப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் ஆணையை செயற்படுத்தல், தொடராய்வு மற்றும் தேவையான தலையீடுகள் மூலம் ஒட்டுமொத்த அபிவிருத்திச் செயன்முறையின் வெற்றியை உறுதி செய்வதாகும்.

அரச பொறிமுறையை செயற்படுத்துவதில் முக்கிய நிறுவனமாக உள்ளதால், அதீத ஒழுக்கத்துடனும், சரளமாகவும், முன்மாதிரியாகவும் செயற்படுவதற்கு சிரேஷ்ட அலுவலர்கள் தொடக்கம் கீழ்நிலை அலுவலர்கள் வரை கடமைப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு இறுதியில் ''சுபீட்சத்தின் நோக்கு'' ஆரம்பிக்கப்படுவதுடன் எதிர்வரும் வருடங்களில் விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளுடனான நடவடிக்கைகள் மூலம் கோலோச்சுவது 2020 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கையிலாகும்.

**பீ.பி.ஜயசுந்தர,**

ஜனாதிபதியின் செயலாளர்.

**2019 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை**

**நிறுவனத்தின் பெயர் : ஜனாதிபதி செயலகம்**

**செலவு விடய இலக்கம் : 01**

***உள்ளடக்கம்*** ***பக்கம்***


| | |
|---|---|
| அத்தியாயம் 01 – நிறுவனக் கட்டமைப்பும் செயற்பாடும் | 1 |
| அத்தியாயம் 02 – அடைவுகள் மற்றும் எதிர்கால நோக்கு | 5 |
| அத்தியாயம் 03 – ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை | 7 |
| அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள் | 15 |
| அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வதற்கான செயலாற்றுகை | 33 |
| அத்தியாயம் 06 – மனிதவள கட்டமைப்பு | 34 |
| அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை | 43 |

# அத்தியாயம் 01

## தொலைநோக்கு

கௌரவமான பிரசைகளுடன் கூடிய பாதுகாப்பான சுபீட்சமான நாட்டை உருவாக்குதல்

## பணிக்கூற்று

மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு அரசியலமைப்பின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றுவதற்கும் சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் குறித்த அனைத்துவித இலக்குகளையும் பூர்த்தி செய்வதற்கும் அரச கட்டமைப்பை சரியான திசையில் கொண்டு செல்லல் மற்றும் வினைத்திறனாக பயனுள்ள நோக்கங்களை அடைதல்.

## ஜனாதிபதி செயலகத்தின் நோக்கங்கள்

- ❖ அரசியலமைப்பு மற்றும் பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மூலம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கருமங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதல் மற்றும் குறித்த அதிகாரங்கள் பொறுப்புக்கள் அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கமைய வினைத்திறனாகவும் ஈடுபாட்டுடன் நிறைவேற்றல்.
- ❖ கொள்கை வகுப்புக்களுக்குத் தேவையான தரவுகள் மற்றும் தகவல்களைத் திரட்டல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் தேவைக்கேற்ப அறிக்கைகளை வழங்கல்.
- ❖ இலங்கையைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு இற்குத் தேவையான வளங்களைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும்
- ❖ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட நவீனமய நோக்கங்களுக்கமைய முயற்சியாண்மையாளர்களுக்கான புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் மற்றும் வணிக நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு செல்வதற்கு இளைஞர் சமூகத்திற்கு உதவுதல்
- ❖ துரித நிவாரணங்களை வழங்குவதன் மூலம் மக்கள் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைத்தல்
- ❖ ஒழுக்கமுள்ள, சட்டத்தை மதிக்கும், குணப்பண்புகளுடன் கூடிய சமூகச் சூழலை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளுடன் கூடிய சூழலை உருவாக்குதல்

## ➢ ஜனாதிபதி செயலகத்தின் பணிகள்

அரசியலமைப்புக்கமைய ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றல்

கொள்கை வகுப்புக்களுக்கு வசதியளித்தலும் ஒருங்கிணைப்புச் செய்தலும்

இலங்கையின் இயற்கை வளங்களை பேண்தகு வகையில் பயன்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் முகாமைப்படுத்தல் மூலம் உகந்த வாழ்க்கைச் சூழலை நிலைநாட்டல்

நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவத்தின் மூலம் சுபீட்சம் மிகுந்த நாட்டை இலகுவாகக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கையெடுத்தல்

மக்களின் நலன்களுக்காக செயற்படல்

மக்களுக்கு துரிதமாக பதிலளித்தல் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்

**செயலகத்தின் கீழ் இயங்கும் பிரிவுகள்**

- செயலாளர் பிரிவு
- பிரத்தியேக செயலாளர் பிரிவு
- பணியாளர் குழாம் பிரதானி பிரிவு
- அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு
- மனிதவள அபிவிருத்திப் பிரிவு
- கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு
- அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்புச் செயற்பாட்டுப் பிரிவு
- நிறுவன ஒருங்கிணைப்புப் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு
- உள்ளக நிர்வாகப் பிரிவு
- சட்டப் பிரிவு
- பேண்தகு அபிவிருத்திப் பிரிவு
    - உணவு உற்பத்தித் தேசிய செயற்றிட்டம்
    - சிறியளவிலான விவசாய வியாபார பங்களிப்புச் செயற்றிட்டம் (SAPP)
    - கிராம சக்தி
    - பேண்தகு தொலைநோக்கு நிகழ்ச்சித்திட்டம்
    - Smart Srilanka நிகழ்ச்சித்திட்டம்
- "புத்தெழுச்சி பெறும் பொலன்னறுவை" நிகழ்ச்சித்திட்டம்
- மக்கள் தொடர்பாடல் பிரிவு
- ஜனாதிபதி நிதியம்
- ஊடகப் பிரிவு
- மீள்கட்டமைப்பு பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2020 தொடக்கம் தொடர்ந்து கீழ்வரும் பிரிவுகள் இயங்குகின்றன

- அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகள் பிரிவு
- அரச மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைகள் பிரிவு
- வெளிநாட்டு தொடர்புகள் பிரிவு
- சட்டப் பிரிவு
- பொருளாதார மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புப் பிரிவு
- மக்கள் தொடர்பாடல் பிரிவு
- நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு
- வழங்கல் மற்றும் உள்ளக நிர்வாகப் பிரிவு
- ஜனாதிபதி ஊடகப் பிரிவு
- கணக்கு மற்றும் நிதிப்பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

# ஜனாதிபதி செயலகத்தின் நிறுவனக் கட்டமைப்பு (நோக்கம் 01)




| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேலதிக செயலாளர் | 1 | 1 | 1 | - | - | - | - | 1 | - | - | - | - | 4 |
| பணிப்பாளர் நாயகம் | - | - | - | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | - | - | 7 |
| பிரதமநிதி அலுவலர் | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | 1 |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 1 | 1 | - | - | - | 1 | 1 | 1 | - | 1 | - | - | 6 |
| பணிப்பாளர் | - | - | 1 | - | 1 | - | - | 1 | 1 | 1 | - | - | 5 |
| பிரதம கணக்காளர்/உள்ளகக் கணக்காய்வு | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | 1 | 2 |
| பிரதிப் பணிப்பாளர் | - | 1 | 1 | - | 1 | - | - | 1 | 3 | - | - | - | 7 |
| உதவிச் செயலாளர் | 3 | 2 | - | - | - | 2 | 2 | 1 | - | 2 | - | - | 12 |
| கணக்காளர் | - | - | - | - | - | - | - | - | - | - | 2 | - | 2 |
| உதவிப் பணிப்பாளர் | - | - | - | - | - | - | - | - | 3 | - | - | - | 3 |
| இயந்திரப் பொறியியலாளர் | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | 1 |
| சட்ட அலுவலர் | - | - | - | 2 | - | - | - | - | - | - | - | - | 2 |
| நிர்வாக அலுவலர் | - | - | - | 1 | - | - | 1 | 2 | 1 | 2 | - | - | 7 |
| தொழிநுட்ப உத்தியோகத்தர் | - | - | - | - | - | - | - | 2 | - | - | - | - | 2 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | - | - | - | - | - | 2 | 7 | 2 | 2 | - | 1 | 14 |
| திட்ட உதவியாளர் | - | - | - | - | 4 | - | - | - | - | - | - | - | 4 |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அலுவலர் | - | - | - | 1 | - | - | 1 | 2 | - | - | - | - | 4 |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 12 | 7 | 2 | 4 | - | 6 | 18 | 33 | 5 | 23 | 13 | 3 | 126 |
| ஊடக அலுவலர் | - | - | - | - | - | - | - | - | 30 | - | - | - | 30 |
| மொத்தம் | 17 | 12 | 5 | 9 | 7 | 10 | 26 | 52 | 46 | 32 | 17 | 5 | 238 |

குறிப்பு : முதன்மைப் பணியாளர் குழாம் - 228,
தொழில்நுட்பம் மற்றும் திறன் விருத்தி உத்தியோகத்தர்கள் - 19,
சாரதிகள் - 80,
அலுவலக உதவியாளர் மற்றும் மாளிகைப் பராமரிப்பாளர்கள் - 98

# அத்தியாயம் 02

## விசேட அடைவுகள்

❖ எமது செயலகத்தின் உற்பத்தித்திறன் மேம்பாட்டு பிரிவால் பெறப்பட்ட 2016-2017 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித்திறன் விருதுக்கான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமை விசேட வெற்றியாகும். இங்கு ஜனாதிபதி செயலகத்தில் உற்பத்தித்திறன் தொடர்பான கொள்கைகளைச் நடைமுறைப்படுத்தி பணியாளர்கள் அதற்காக வழிநடாத்தப்பட்டனர். போட்டியில் கலந்து கொண்ட முதற்தடவையிலேயே விருது கிடைத்தமை விசேட வெற்றியாகும்.

## எதிர்கால இலக்குகள்

- மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் பணிப்புக்கமைய சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனம் நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டங்கள்/கருத்திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்

- மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சிகளை சரியான வகையில் நடாத்திச் செல்வதற்கு ஒத்துழைத்தல்

- மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள், கலந்துரையாடல் மற்றும் வைபவங்கள் போன்றவற்றை ஒருங்கிணைப்புச் செய்தல்

- மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளின், மக்களின், வணக்கத் தலைவர்களிடமிருந்து கிடைக்கும் கடிதங்களுக்காக துரிதமாக நடவடிக்கையெடுத்தல்

- மக்களின் பொதுப் பிரச்சினைகளுக்கு நேரடியாகத் தலையிட்டு குறித்த பிரச்சனைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுத்தல்

- மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் ஆலோசனைகள் மற்றும் பணிப்புக்களுக்கமைய ஒப்படைக்கப்படும் வேறு கடமைகளை உச்ச வினைத்திறனுடன் நிறைவேற்றல்

- நாளாந்தக் கடமைகளுக்குத் தேவையான தகவல் திரட்டை இற்றைப்படுத்திப் பேணுதல்

- 2019 நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி 7 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக மேன்மைதங்கிய கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் ஊடகப்பிரிவு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி முதல் கடமைகளை ஆரம்பித்தது.

- சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கமைய மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் மேற்கொள்ளும் செயற்றிட்டங்கள் மற்றும் நாளாந்தம் எடுக்கப்படும் தீர்மானங்களும் அனைத்து ஊடகங்கள் வாயிலாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு ஊடகப்பிரிவு முன்னுரிமைளித்து செயற்படுதல்

- இலத்திரனியல், அச்சு, இணையத்தளம் மற்றும் ஏனைய சமூக ஊடகங்கள் வாயிலாக ஜனாதிபதியினதும் செயலகத்தினதும் சுற்றுநிருபங்கள் உள்ளிட்ட ஊடக அறிவித்தல்களை வழங்கல்.

- 2020 ஆம் ஆண்டு சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி ஊடகப்பிரிவுக்கு பாரிய பரந்துபட்ட செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

- 2019 ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் முதற்கட்டமாக ஜனாதிபதி செயலணியை உருவாக்கி ஏழை மக்களுக்காக ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் மக்களைத் தெளிவூட்டுவதற்காகவும் ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்படும் அறிவித்தல்களைத் தயாரித்து பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் ஊடக அறிவித்தல்களைத் தயாரித்தல் போன்ற பொறுப்புக்கள் ஜனாதிபதி ஊடகப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- அதேபோல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- ஜனாதிபதி அவர்களின் பதவிக்காலத்தின் முதல் 100 நாட்களில் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீள நினைவுபடுத்தும் பணியை அனைத்து ஊடகங்களையும் ஒருங்கிணைப்பு செய்தல்

- ஜனாதிபதி அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

- ஆங்கில மொழிமூல வாசிப்பாளர்களை இலக்கு வைத்து “Signature of the Executive” எனும் சஞ்சிகை வெளியிடல்

- இரண்டு மாத மாநாடு மூலம் ஜனாதிபதி அவர்களின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான உரையாடலை நடாத்துதல் மற்றும் ஒளி, ஒலி மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தல்

- மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மக்களுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் உண்மையானதும் துரிதமானதுமான தொடர்பாடலை மேற்கொள்ளல்

- மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் பிரதி பிம்பத்தையும் ஜனாதிபதியின் பதவிக் காலத்தின் மதிப்பைப் பாதுகாக்கும் வகையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அறிவித்தல் செயற்பாடுகளும் உள்ளிட்ட அனைத்துத் தொடர்பாடல் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளைக் கண்காணித்தல்

- மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களதும் அரசாங்கத்தினதும் செயற்றிட்டங்களான சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைய விசேட ஊடகச் செயற்பாடுகள் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்

- மக்களுடைய வேண்டுகோள், குறைகேள்கள், கருத்துக்கள், யோசனைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக செயற்படுவதற்கு அரச திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் முறையான பொறிமுறையொன்றை உருவாக்கி மேற்கொள்ளலும் தொடராய்வு செய்தலும்

- மக்களால் முன்வைக்கப்படும் குறைகேள்கள், கருத்துக்கள் போன்ற அனைத்தையும் ஜனாதிபதிக்குத் தெரிவிக்க நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் குறித்த அமைச்சுக்களுக்கு தெரியப் படுத்துவதன் மூலம் முறையான பொறிமுறையின் கீழ் ஒவ்வொரு கடிதங்கள் தொடர்பாகவும் நடவடிக்கையெடுத்தல் மற்றும் மாதாந்த, மூன்றுமாத மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

- ஜனாதிபதிக்குத் தெரிவிக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மக்கள் வேண்டுகோள்கள், குறைகேள்கள், பிரச்சினைகள், கருத்துக்கள், யோசனைகள் மற்றும் முறைப்பாடுகளின் தன்மைக்கேற்ப அவற்றைச் சரியாக வகைப்பிரித்து தொகுதி உபதொகுதிகளைப் பகுப்பாய்வு செய்து அரச சேவைகளை வழங்குவதில் மேலெழும் மக்களுடைய பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்குவதற்குத் தேவையான அரச கொள்கை வகுப்புக்களுக்கமைவாக தீர்மானமெடுப்பதில் தலையிடல்.

# அத்தியாயம் 03

## 3.1 நிதிச் செயற்பாட்டு அறிக்கை

ஏசீஏ-எப்

### 2019 முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை

| வரவு செலவு 2019 | | குறிப்பு | 2019 ரூ. | 2018 ரூ. | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானம்** | | | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பண்டங்கள் சேவைகளுக்கான வரி | 2 | | 28,326,248,471 | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | |
| - | வரியற்ற வருமானமும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானம்(அ)** | | - | 28,326,248,471 | |
| - | **வருமானமற்ற கிடைப்பனவுகள்** | | | - | |
| - | திறைசேரிக் கட்டுப்பணம் | | 5,606,000,000 | 4,424,000,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புக்கள் | | 210,677,880 | 187,250,100 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்கு | | 62,657,454 | 34,128,338 | ஏசீஏ-5/5(ஐ) |
| - | ஏனைய கிடைப்பனவுகள் | | 76,544,714 | 54,537,386 | |
| - | **மொத்த வருமானமற்ற கிடைப்பனவுகள் (ஆ)** | | **5,955,880,048** | **4,699,915,824** | |
| - | **மொத்த வருமானக் கிடைப்பனவுகள் மற்றும் வருமானமற்ற கிடைப்பனவுகள் =(அ)+ (ஆ)** | | **5,955,880,048** | **33,026,164,295** | |
| - | **கழிக்கப்பட்ட செலவுகள் மீண்டெழும் செலவுகள்** | | - | - | |
| 894,170,000 | சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் ஏனைய பணியாளர் செலுத்தல்கள் | 5 | 866,954,633 | 721,389,970 | |
| 2,383,383,000 | ஏனைய பண்டங்கள் சேவைகள் | 6 | 2,234,234,254 | 1,907,770,877 | ජීඩීජී-2(ii) |
| 300,104,250 | நிவாரணங்கள், நன்கொடைகள், மாற்றங்கள் | 7 | 276,909,029 | 259,181,627 | |
| - | வட்டி செலுத்தல் | 8 | | | |
| 100,000 | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 9 | 100,000 | 400,000 | |
| 3,577,757,250 | **மொத்த மீண்டெழும் செலவுகள்(இ)** | | **3,378,197,916** | **2,888,742,475** | |

ஏசீஏ-எப்

## 2019 முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை

| வரவு செலவு 2019 | | குறிப்பு | 2019 ரூ. | 2018 ரூ. | |
|---|---|---|---|---|---|
| | **மூலதனச் செலவு** | | | | |
| 582,100,000 | மூலதனச் சொத்துக்களைப் புதுப்பித்தலும் மேம்படுத்தலும் | 10 | 516,536,801 | 472,951,205 | |
| 380,798,000 | மூலதனச் சொத்துக்களின் திரட்டு | 11 | 199,177,522 | 434,564,750 | |
| 4,462,700,000 | மூலதன மாற்றம் | 12 | 2,054,750,401 | 2,001,034,004 | ஏசீஏ-2(ii) |
| 900,000,000 | மூலதனச் சொத்துத் திரட்டல் | 13 | 799,966,030 | 556,929,994 | |
| 8,000,000 | இயலளவு விருத்தி | 14 | 7,382,267 | 7,982,237 | |
| 5,386,117,000 | ஏனைய மூலதனச் செலவுகள் | 15 | 3,301,665,959 | 1,686,551,341 | |
| **11,719,715,000** | **மொத்த மூலதனச் செலவு (ஈ)** | | **6,879,478,980** | **5,160,013,532** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவு (உ)** | | 275,476,557 | 161,367,088 | |
| | **வைப்புக்களுக்கான செலுத்தல்கள்** | | 211,999,662 | 107,389,048 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவு** | | 63,476,895 | 53,978,040 | ஏசீஏ-5/5(ஐ) |
| | **மொத்தச் செலவு = (இ) + (ஈ) + (உ)** | | 10,533,153,454 | 8,210,123,095 | |
| - | **2019 டிசம்பர் 31 இல் கட்டு முற்பண மீதி ஊ = (இ)-(உ)** | | (4,577,273,406) | 24,816,041,200 | |

## 3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ-பீ

**2019.12.31 திகதியில்**

**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|---|
| <u>**நடைமுறையல்லாச் சொத்துக்கள்**</u> | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | ஏசீஏ-6 | 41,506,356,073 | 10,271,597,445 |
| வட்டி முதலீடுகள் | | 195,174,761 | |
| <u>**நடைமுறைச் சொத்துக்கள்**</u> | | | |
| முற்பணக் கொடுப்பனவு | ஏசீஏ-5/5(ஏ) | 105,985,040 | 105,165,600 |
| பணம் மற்றும் பணத்திற்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **41,612,341,114** | **10,376,763,045** |
| <u>**தேறிய சொத்துக்கள்**</u> | | | |
| தேறிய சொத்துக்கள் | | (519,211,023) | (521,373,624) |
| சொத்து, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பு | | 41,506,356,073 | 10,271,597,445 |
| வட்டி தாங்கிய பொறுப்புக்கள் | | 195,174,761 | |
| கூலி மற்றும் லேசை முற்பண இருப்பு | ஏசீஏ-5(பீ) | | |
| <u>**நடைமுறைப் பொறுப்புக்கள்**</u> | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 625,196,063 | 626,517,845 |
| கட்டுப்பண மீதி | ஏசீஏ-3 | | 21,378 |
| **மொத்தச் சொத்து** | | **41,612,341,114** | **10,376,763,045** |

05 ஆம் பக்கத்திலிருந்து 147 ஆம் பக்கம் வரை ஏசீஏ 1 தொடக்கம் ஏசீஏ 6 வரை படிவங்களின் படி சமர்ப்பிக் கப்படும் கணக்கு விபரங்கள் மற்றும் குறிப்புக்கள் 148 ஆம் பக்கம் தொடக்கம் 187 வரை உள்ளடங்கிய கணக்குக் குறிப்பு விபரங்களும் இவ் இறுதிக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. குறித்த நிதிக் கூற்று தயாரித்தல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்நிதிக் கூற்றுக் குறிப்புக்கள் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கமைவான கணக்குக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய கணக்கு விபரங்கள் திறைசேரிக் கணக்குப் புத்தகத்துடன் ஒப்பிட்டுப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த தொகைகளுடன் பொருந்துகின்றதென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

| பிரதம கணக்கெடுப்பு அலுவலர் | கணக்கெடுப்பு அலுவலர் | பிரதம நிதி அலுவலர்/பிரதம கணக்காய்வாளர் |
|---|---|---|
| பெயர்: | பெயர்: | பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பதவி: | பதவி: | பெயர் : |
| திகதி: 2020.02. | திகதி : 2020.02. | திகதி : 2020.02. |

### 3.3 காசுப்பாய்ச்சல் கூற்று

**ஏசீஏ-சீ**

**2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**காசுப்பாய்ச்சல் கூற்று**

| | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| நடவடிக்கைச் செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல் | | |
| மொத்த வரி வருமானம் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானமற்ற கிடைப்பனவுகள் | 11,920,978 | 4,444,081,037 |
| வேறு வழிகளாலான வருமானம் | 4,972,536 | |
| கட்டு நிதி வருமானம் | 5,606,000,000 | |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல் (அ)** | 5,622,893,514 | 4,444,081,037 |

ஏசீஏ-சீ

## 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| **கழிவு: செலவுகள்** | | |
| ஊழியர் சம்பளச் செலவுகள் | 2,798,361,742 | 2,472,724,011 |
| நிவாரணங்கள் மற்றும் பரிமாற்றல்கள் | 239,380,829 | 221,181,627 |
| வேறு வழிகளாலான செலவுகள் | 29,623,174 | |
| திறைசேரிக்கு நிரப்பப்பட்ட கட்டு நிதி | 68 | 58 |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல்(ஆ)** | **3,067,365,813** | **2,693,905,696** |
| **நடவடிக்கைச் செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல்(இ) = (அ) + (ஆ)** | **2,555,527,701** | **1,750,175,341** |
| **முதலீட்டு நடவடிக்கைகளாலான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| வருமானம் | - | - |
| இழப்பு ஒதுக்கீடு மற்றும் சொத்து விற்பனை | - | - |
| உபகரணங்கள் அறவீடுகள் | | (40,437,665) |
| முற்பண அறவீடுகள் | 2,660,294 | |
| **முதலீட்டு நடவடிக்கைகளாலான காசுப் பாய்ச்சல்(இ)** | **2,660,294** | **1,600,614,844** |
| **கழிவு: செலவுகள்** | | |
| சொத்துக்கள் கட்டுமானம், கொள்வனவு மற்றும் ஏனைய முதலீட்டு அடைவுகள் | 2,528,056,619 | - |
| முற்பணக் கொடுப்பனவு | 49,942,469 | |
| **முதலீட்டு நடவடிக்கைகளால் செலவாகிய மொத்தத் தொகைக்கான காசுப் பாய்ச்சல்(ஈ)** | **2,577,999,088** | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)** | **(2,575,338,794)** | **(1,641,088,509)** |
| **முதலீடு மற்றும் நடவடிக்கைகளால் தேறிய காசுப்பாய்ச்சல் (ஊ) = (ஆ) + (இ)** | **(19,811,094)** | **109,086,832** |

ஏசீஏ-சீ

## 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| <u>நிதி நடவடிக்கைகளுக்கான காசுப்பாய்ச்சல்</u> | | |
| உள்ளூர் கடன் பெறல் | - | - |
| வெளிநாட்டுக் கடன் பெறல் | - | - |
| நன்கொடைகளாலான வரவு | - | - |
| வைப்புக்களாலான வரவு | 206,384,619 | |
| **நிதி நடவடிக்கைகளாலான மொத்தக் காசுப்பாய்ச்சல்(எ)** | 206,384,619 | 33,443,153 |
| <u>கழிவு: செலவுகள்</u> | | |
| உள்ளூர் கடன் மீளச் செலுத்தல் | - | - |
| வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தல் | - | - |
| வைப்புக்களுக்கான செலுத்தல்கள் | 186,573,525 | (73,916,818) |
| **நிதி நடவடிக்கைச் செலவுகளுக்கான மொத்தக் காசுப்பாய்ச்சல் (ஏ)** | 186,573,525 | (73,916,818) |
| **நிதிச் செயற்பாடுகளாலான மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஐ) =(எ)-(ஏ)** | 19,811,094 | 107,359,971 |
| **பணப்புழக்க தேறிய மாற்றங்கள் (ஓ) = (ஊ) -(ஐ)** | (0) | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பப் பணமீதி** | - | - |
| **டிசம்பர் 31 ஆம் திகதியில் இறுதிப் பணமீதி** | - | 1,726,861 |

### 3.4 நிதிச் செயற்பாட்டுக் குறிப்பு

### 3.5 வருமானத் திரட்டு அறிக்கை (ஏற்புடையதல்ல)

### 3.6 ஒதுக்கப்பட்ட நிதிப் பயன்பாட்டுச் செயலாற்றுகை

| நிதி ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கப்பட்ட நிதி | | உண்மைச் செலவு | இறுதி ஒதுக்கீட்டில் பயன்படுத்தப்பட்ட நிதியின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| | ஆரம்பம் | இறுதி | | |
| மீண்டெழும் செலவுகள் | 2,933,390 | 3,577,757 | 3,378,198 | 94 |
| மூலதனச் செலவுகள் | 10,627,300 | 11,719,715 | 6,879,479 | 59 |

### 3.7 நிதி ஒழுங்கு 208 இன் பிரகாரம், வேறு அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக குறித்த திணைக்களத்திற்கு/மாவட்டச் செயலகத்திற்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி

| தொடர் இல. | நிதி பெறப்பட்ட அமைச்சு/ திணைக்களம் | நிதியொதுக் கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | இறுதி ஒதுக்கீட்டில் பயன்படுத்தப் பட்ட நிதியின் சதவீதம் % |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்பம் | இறுதி | | |
| 01 | தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார, மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக் கான கொடுப்பனவு | | 420 | 20 | 5% |
| 02 | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண உள்ளுராட்சி அமைச்சு | இராசரட்டை நவோதயம்- ஜனாதிபதி நிகழ்ச்சித் திட்டம் | | 40,000 | 29,603 | 74% |
| 03 | ஓய்வூதியத் திணைக்களம் | | | 150 | 150 | 100% |

### 3.8 நிதியல்லாச் சொத்துக்கள் அறிக்கைப்படுத்தும் செயலாற்றுகை

ரூ. 000

| சொத்து குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2019 ஆம் திகதியில் ஆய்வு அறிக்கைக் கமைய மீதி | 31.12.2019 ஆம் திகதியில் நிதி நிலைமை அறிக்கைககமைய மீதி | கணக்கிடப்பட வேண்டியவை | முன்னேற்றத்தை சதவீதத்தில் % அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடக் கட்டமைப்பு | | 1,118,724 | | |
| 9152 | இயந்திரங்களும் உபகரணங்களும் | | 4,517,767 | | |
| 9153 | காணி | | 35,541,525 | | |
| 9154 | கட்புலனற்ற சொத்து | | 493 | | |
| 9155 | உயிரியல் சொத்து | | - | | |
| 9160 | செயற்பாட்டிலுள்ள வேலைகள் | | 80,437 | | |
| 9180 | குத்தகைச் சொத்துக்கள் | | 247,410 | | |

### 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இப் புத்தகத்தின் இறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

## 1. ஜனாதிபதி பிரத்தியேக செயலாளர் பிரிவு

| விசேட சுட்டிகள் | எதிர்பார்க்கும் வெளியீடுகளின் சதவீதத்திற்கமைய (%) உண்மை வெளியீடுகள் | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கு நாளாந்தம் கிடைக்கும் கடிதங்களில் நடவடிக்கையெடுக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை | ✓ | | |
| மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் பங்குகொள்ளும் வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் சந்திப்புக்கள் போன்ற நாளாந்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை (நாட்குறிப்பு) | ✓ | | |
| மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குகொள்ளும் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை | ✓ | | |
| மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களால் சமர்ப்பிக்கப்படும் பல்வேறு வேண்டுகோள்கள் தகவல் தொகுதிக்கு உள்வாங்கப்பட்ட எண்ணிக்கை | ✓ | | |
| ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தரும் தேரர்கள் மற்றும் ஏனைய மதகுருமார்களின் தேவைகளைக் கண்டறிந்து தீர்வுகள் வழங்கிய எண்ணிக்கை | ✓ | | |
| பல்வேறுபட்ட சமய நிகழ்வுகள் மற்றும் கருத்திட்ட ஒழுங்குபடுத்தல்களின் எண்ணிக்கை | ✓ | | |

## 2. அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்புச் செயற்பாட்டுப் பிரிவு

| **I. அரசியலமைப்பின் மூலமும் வேறு அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் பல்வேறு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு** | |
|---|---|
| • அமைச்சரவை அமைச்சர்கள் | 12 |
| • அமைச்சரவையற்ற அமைச்சர்கள் | 04 |
| • இராஜாங்க அமைச்சர்கள் | 05 |
| • பிரதி அமைச்சர்கள் | 02 |
| • மாகாண ஆளுநர்கள் | 12 |
| • உயர்நீதிமன்ற நீதியரசர்கள்/நீதிவான்கள் | 04 |
| • மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிவான்கள் | 04 |
| • நீதிவான் நீதிமன்ற நீதிவான்கள் | 00 |

| **I. அரசியலமைப்பின் மூலமும் வேறு அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் பல்வேறு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு** | |
|---|---|
| • நீதிச் சேவை ஆணைக்குழு அங்கத்தவர்கள் | 01 |
| • நீதிவான் நீதிமன்ற ஆணையாளர்கள் | 00 |
| • ஜனாதிபதி சட்டத்தரணிகள் | 21 |
| • சட்டமா அதிபர் | 01 |
| • இலங்கை நியாயசபை அங்கத்தர்கள் | 01 |
| • அமைச்சுக்களின் செயலாளர்கள் | 07 |
| • மாகாண பிரதம செயலாளர்கள் | 00 |
| • அரசியலமைப்பின் 34 ஆம் அரசியலமைப்புக்கமைய ஜனாதிபதி மன்னிப்பு வழங்கிய எண்ணிக்கை | 03 |
| • சிறைவாச காலம் குறைத்தல் | 40 |
| • சிறைக்கைதிகளை முழுமையாக விடுவித்தல் | 21 |
| • மரண தண்டனையை ஆயுட்காலத் தண்டனையாக மாற்றுதல் | 05 |
| • விமானப்படைத் தளபதி | 01 |
| • கடற்படைத் தளபதி | 01 |
| • இராணுவத் தளபதி | 01 |
| • பொலிஸ்மா அதிபர்(பதில்) | 01 |
| • பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் | 02 |
| • பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் | 06 |
| • மத்தியஸ்த சபை ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 05 |
| • வரையறுக்கப்பட்ட பத்திரிகை நிறுவனத்தை மேம்படுத்துவதற்காக தேடி ஆராயும் குழுவுக்கு அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • குற்றச்செயலின் போது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய சபைக்கு அங்கத்தவர்களை நியமித்தல் | 05 |
| • பொது ஒப்பந்த உடன்படிக்கைப் பதிவாளர் | 00 |
| • உதவிப் பொது ஒப்பந்த உடன்படிக்கைகள் பதிவாளர் | 01 |

| I. அரசியலமைப்பின் மூலமும் வேறு அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் பல்வேறு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு | |
|---|---|
| • சாரணர் இயக்கத் தலைமையக ஆணையாளர்கள் | 00 |
| • சாரணர் இயக்க மாவட்ட ஆணையாளர்கள் | 03 |
| • நிகழ்ச்சித்திட்ட ஆணையாளர்கள் - சாரணர் இயக்கம் | 01 |
| • ஜனாதிபதி சாரணர் விருது வழங்கல் (சான்றிதழ்) | 259 |
| • இலங்கைக் கொள்கைகள் கற்கை நிறுவன முகாமைத்துவச் சபை | 04 |
| • புத்த சாசன நிதியத்தின் ஆலோசனைக் குழு | 05 |
| • எஸ்.டப்ளிவ்.ஆர். டீ. பண்டாரநாயக்க ஞாபகார்த்த அமைப்பின் முகாமைத்துவ சபை | 02 |
| • இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் | 00 |
| • ரணவிரு சேவா அதிகாரசபை முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள் | 07 |
| • இலங்கை மன்றக் கல்லூரியின் முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள் | 04 |
| • இரண்டாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கத்தவர்கள் | 00 |
| • தேசிய விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப சபைக்கான அங்கத்தவர்களை நியமித்தல் (NASTEC) | 08 |
| • இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபை நியமித்தல் | 03 |
| • நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • முதியோர்களுக்கான தேசிய சபை அங்கத்தவர்கள் | 04 |
| • ஊனமுற்றோருக்கான தேசிய சபை அங்கத்தவர்கள் | 01 |
| • தேசிய கல்வி ஆணைக்குழு அங்கத்தவர்கள் | 02 |
| • தொழில் நியாய சபைக்கு அங்கத்தவர்களை நியமித்தல் | 09 |
| • பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • அரச துறையின் சம்பள மீளாய்வு தொடர்பான விசேட ஆணைக்குழு | 00 |
| • இலங்கைப் பத்திரிகைச் சபை அங்கத்தவர்களை நியமித்தல் | 02 |
| • அரச மொழிகள் ஆணைக்குழுவுக்கு அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • குற்றச் செயலின் போது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை | 05 |
| • சம்பளம் மற்றும் ஆளணி தொடர்பான தேசிய ஆணைக்குழுச் செயலாளரை நியமித்தல் | 00 |

| **I. அரசியலமைப்பின் மூலமும் வேறு அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலமும் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் பல்வேறு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு** | |
|---|---|
| • சம்பளம் மற்றும் ஆளணி தொடர்பான தேசிய ஆணைக்குழு அங்கத்தவர்கள் நியமித்தல் | 00 |
| • சோதனை ஆணைக்குழு (ஜனாதிபதியின் பணிப்பின் பிரகாரம் நியமிக்கப்படும்) | 03 |
| • திரிபிடகப் பாதுகாப்புச் சபைக்கு அங்கத்தவர்கள் நியமித்தல் | 43 |
| • தேரவாத பாளி திரிபிடகத்தை யுனெஸ்கோ உலக மரபுரிமை ஆவணமாக உள்வாங்குவதற்கான விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் குழு | 15 |
| • இலங்கை விமானச் சேவைகள் மறுசீரமைப்புக்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான குழு | 12 |
| • அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கான அங்கத்தவர்களை நியமித்தல் | 08 |
| • தேசிய பொலிஸ் ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 08 |
| • இலஞ்ச ஊழல் சாத்துதல்கள் மற்றும் விசாரணை ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • இலஞ்ச ஊழல் சாத்துதல்கள் மற்றும் விசாரணை ஆணைக்குழுவுக்கான பணிப்பாளர் நாயகம் நியமித்தல் | 00 |
| • தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கான அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • நிதி ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 03 |
| • கணக்காய்வு சேவை ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 04 |
| • எல்லை நிருணய ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 03 |
| • தேசிய பெறுகை ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 04 |
| • இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 05 |
| • தகவல் அறியும் உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவுக்கான அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • தொழிற்பேட்டைகளுக்கான ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நடுவர் சபை நியமித்தல் | 00 |
| • மாகாண சபை தேர்தல்கள் எல்லை நிருணய குழு நியமித்தல் | 00 |
| • மத்திய வங்கி ஆளுநரை நியமித்தல் | 00 |
| • கணக்காய்வாளர் நாயகத்தை நியமித்தல் | 01 |
| • இலங்கை அங்கீரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நிறுவனத்திற்கான தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் நியமித்தல் | 00 |
| • இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் நியமித்தல் | 00 |
| • மத்திய சுற்றாடல் அதிகாரசபை தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் நியமித்தல் | 01 |
| • தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அங்கத்தவர்கள் நியமித்தல் | 01 |

| I. அரசியலமைப்பின் மூலமும் வேறு அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலமும் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் பல்வேறு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு | |
|---|---|
| • பௌத்த ஆலோசனைச் சபை அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • தேசிய பெண்கள் குழு அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • சிறுவர் உரிமைகள் தொடர்பாக தேசிய செயற்பாட்டுக் குழுவுக்கான அங்கத்தவர்கள் நியமித்தல் | 00 |
| • இலங்கை மத்திய வங்கி நிதிச் சபை அங்கத்தவர்கள் நியமித்தல் | 01 |
| • தேசிய நிதிக் கற்கைகள் நிறுவன ஆய்வுச் சபைக்கான அங்கத்தவர்களை நியமித்தல் (NIFS) | 00 |
| • புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைக்கான அங்கத்தவர்களை நியமித்தல் | 00 |
| • பாராளுமன்ற பொதுச் செயலாளரை நியமித்தல் | 00 |
| • நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளரை நியமித்தல் (குறைகேள் அதிகாரி) | 01 |
| • தேசிய மாணவர் படையணிப் பணிப்பாளரை நியமித்தல் | 00 |
| • பேண்தகு அபிவிருத்திச் சபைக்கான தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமித்தல் | 01 |
| • தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபை அங்கத்தவர்களை நியமித்தல் | 04 |
| • அமரதேவ அழகியற் கலைகள் மற்றும் ஆய்வு நிலையத்திற்கான அங்கத்தவர்களை நியமித்தல் | 01 |

| காணி உறுதி மற்றும் நீண்டகாலக் குத்தகை | |
|---|---|
| • நீண்டகாலக் குத்தகை வழங்கல் | 145 |
| • அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் | 776 |
| • 27 ஆம் உறுப்புரைக்கமைய காணிகள் ஒப்படைத்தல் | 168 |
| • இராணுவத்தினருக்கான உறுதி வழங்கல் | 55 |
| • சுனாமி கொடுப்பனவுப் பத்திரம் வழங்கல் | 340 |
| • விகாரைகளுக்கான கொடுப்பனவுப் பத்திரம் வழங்கல் | 68 |
| • இலங்கை முதலீட்டுச் சபைக்கு காணிகள் வழங்கல் | 00 |
| • நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குக் காணிகள் ஒப்படைத்தல் | 03 |
| • வீடமைப்பு அதிகாரசபைக்குக் காணிகள் ஒப்படைத்தல் | 28 |
| • மாற்றுக் காணிகள் வழங்கல் | 24 |
| • மகாவலி குத்தகை | 61 |
| • மகாவலிக் கொடுப்பனவுப் பத்திரம் வழங்கல் (அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்கான) | 179 |
| • மகாவலி கொடுப்பனவுப் பத்திரம் வழங்கல் (காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ்) | 8842 |
| • மகாவலிப் பிரதேசங்களில் காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்தல் | 03 |
| • மகாவலி குத்தகை இரத்துச் செய்தல் | 02 |

| | |
|---|---|
| **காணி உறுதி மற்றும் நீண்டகாலக் குத்தகை** | |
| • மகாவலி விகாரைகள் | 22 |
| • புதிய ரன்பிம கொடுப்பனவுப் பத்திரம் வழங்கல் | 13134 |
| • அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்தல் | 329 |
| • அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 4(1) இன் கீழ் இரத்துச் செய்யப்பட்ட காணிகள் உறுப்புரை 4(3) இன் கீழ் புதிய கொடுப்பனவும் பத்திரம் வழங்கல் | 1421 |
| • நடுத்தர வர்க்க காணிகள் | 39 |
| • அரச காணி கட்டளைச் சட்டத்தின் 104 ஆவது உறுப்புரைக்கமைய இரத்துச் செய்தல் | 43 |
| • செயற்பாட்டு ஒப்பந்தப் பத்திரம் வழங்கல் | 921 |
| **ஏனைய அரசியலமைப்பு தலையீடுகள்** | |
| • நடாத்தப்பட்ட கேள்விச்சபை மேல்முறையீட்டுக் குழுக்கூட்டம் | 46 |
| • அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயண விடுமுறைகள் | 557 |
| • அமைச்சின் செயலாளர்களின் வெளிநாட்டுப் பயண விடுமுறைகள் | 180 |
| • வேறு வெளிநாட்டுப் பயண விடுமுறைகள் | 328 |
| • முப்படையினருக்கான வீரப் பதக்கங்கள் அணிவித்தல் | 2604 |
| • அதிகாரிகளுக்கான கட்டுப் பத்திரம் (முப்படையினருக்கான) | 300 |
| • மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கான வெளிநாட்டுப் பயணங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் | 600 |
| • மக்கள் பிரதிநிதிகளின் அரச செலவுகளை முகாமைத்துவம் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் பின்பற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பாக சுற்றறிக்கை வெளியிடல் | 01 |
| • ADC இனைக் கூட்டுதல் | 30 |

## 3. அரச மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரிவு

➢ **அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், மற்றும் அரசியலமைப்பு நிறுவனங்களுக்கான பணிப்பாளர் சபைக்கான பதவிகளை நியமிக்கும் செயற்பாடுகள்**

1. தலைவர்கள்/பணிப்பாளர் சபை அங்கத்தவர்களாகச் சேவையாற்ற விருப்பம் தெரிவிப்பதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக தினமின, தினகரன்,Daily News, லங்காதீப நாளேடு, Daily Mirror, Daily Ft, திவயின, Island, வீரகேசரி, மவ்பிம நாளேடு, அருண நாளேடுகளில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.
2. அரச கூட்டுத்ததாபனங்கள், சபைகள் மற்றும் அரசியலமைப்பு நிறுவனங்களின் பணிப்பாளர் சபை பதவிகளுக்கான வேட்புமனுப் பரிந்துரைகளை மேற்கொள்வதற்கான குழுவொன்றை நியமித்தல்.
3. அதற்கமைய மின்னஞ்சல் வாயிலாக 7000 விண்ணப்பங்களும் தபால் மூலம் 3500 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றன.
4. விண்ணப்பங்களை ஆராய்ந்து மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக குறித்த குழுவால் தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டன.

➢ **மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கீழ்வரும் கலந்துரையாடல்களை ஒருங்கிணைப்பு மற்றும் தொடராய்வு மேற்கொள்ளல்**

1. கல்வி மற்றும் உயர்கல்வி துறைகளுக்குரிய 2019.12.05 அன்று நடைபெற்ற கலந்துரையாடல்
2. மின்சாரத் துறை தொடர்பாக 2019.12.12 இடம்பெற்ற கலந்துரைாடல்
3. கைத்தொழில் துறை தொடர்பாக 2019.01.13 அன்று இடம்பெற்ற கலந்துரையாடல்
4. பல்நோக்கு அபிவிருத்தி செயலணியை உருவாக்குதல் தொடர்பாக 2019.12.18 அன்று இடம்பெற்ற கலந்துரையாடல்
5. நுகர்வோர் சேவைகள் அதிகாரசபையுடன் 2019.12.19 அன்று இடம்பெற்ற கலந்துரையாடல்
6. 2019.12.24 அன்று இடம்பெற்ற வாழ்க்கைச் செலவுகள் தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் முதலாவது கலந்துரையாடல்
7. திறன் விருத்தி மற்றும் தொழில் விருத்தி தொடர்பாக 2019.12.30 அன்று இடம்பெற்ற கலந்துரையாடல்
8. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான 2019.12.30 அன்று இடம்பெற்ற கலந்துரையாடல்
9. மோட்டார் வாகனப் போக்குவரத்து தொடர்பாகக் குறித்த தரப்பினருடனான 2019.12.31 அன்று இடம்பெற்ற கலந்துரையாடல்

➢ **ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கீழ்வரும் கலந்துரையாடல்களின் ஒருங்கிணைப்பு மற்றும் தொடராய்வு மேற்கொள்ளப்பட்டது**

1. அனைத்து அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்களுடன் 2019.12.04 அன்று இடம்பெற்ற கூட்டம்.
2. சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய விடயங்கள் தொடர்பாக 2019.12.19 அன்று இடம்பெற்ற கலந்துரையாடல்

➢ **சுற்றறிக்கைகளை வெளியிடல் மற்றும் சுற்றறிக்கைக் கோவையை இற்றைப்படுத்தல்**

கீழ்வரும் சுற்றுநிருபங்கள் 04 இப்பிரிவின் மூலம் இடம்பெறுவதுடன், குறித்த சுற்றுநிருபங்கள் 04 உள்ளிட்ட ஜனாதிபதி செயலகத்தின் மூலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் 08 இற்காக இலக்கங்களை வழங்கல் இப்பிரிவால் மேற்கொள்ளப்படும்.

| தொடர் இல. | சுற்றுநிருபத்தின் பெயர் | சுற்றுநிருப இலக்கம் | திகதி |
|---|---|---|---|
| 01. | அரச நிறுவனங்கள் மற்றும் வளாகங்களில் இலங்கை அரச இலச்சினையைக் காட்சிப்படுத்தல் | PS/SP/SB/Circular/01/2019 | 2019.11.20 |
| 02. | அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின், அரச கம்பனிகளின் பணிப்பாளர் குழுவின் இராஜினாமா | PS/SP/SB/Circular/02/2019 | 2019.11.28 |
| 03. | நாடளாவிய ரீதியில் பல்வேறு பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பாக நிவாரணங்களை வழங்கல் | PS/SP/SB/Circular/03/2019 | 2019.12.02 |
| 04. | Rationalization of the Prevailing Mechanism on Engaging with Investors, Lending Agencies, Foreign Organizations and Missions | PS/SP/SB/Circular/06/2019 | 2019.12.19 |

- **ஜனாதிபதியால் பல்வேறு பிரிவுகள் மூலம் வெளியிடும் அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவைக் குறிப்புக்களுக்கு இலக்கமிடல்**

ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்கும் ஒவ்வொரு பிரிவுகளாலும் வெளியிடப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவைக் குறிப்புக்களுக்கு இலக்கம் வழங்கல் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், 2019, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 2019, திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 13 மற்றும் குறிப்புக்கள் 06 தொடர்பாக இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வமைச்சரவை விஞ்ஞாபனம் குறிப்புக்களின் நிழல்பிரதி (Scan) செய்யப்பட்ட பிரதிகள் தகவல் தொகுதியில் இற்றைப்படுத்தப்பட்டுப் பேணப்பட்டு வருகின்றது.

- **மாவட்ட ஒருங்கிணைப்பு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கான இணைத் தலைவர்களை நியமித்தலும் ஏனைய நடவடிக்கைகளும்**

திருகோணமலை மாவட்டம் தவிர்ந்த ஏனைய 24 மாவட்டங்களுக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கான தலைவர்கள் 24 பேர் நியமிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

- **சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனம் தொடர்பான நடவடிக்கைகள்**

மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களிடமுள்ள தனிப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிட வேண்டிய இரு நபர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட 02 பிரகடனங்கள் முறையாகப் பொறுப்பேற்றல் தொடர்பான கடிதங்கள் இப்பிரிவின் மூலம் மேற்படி காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

## 4. சட்டப்பிரிவு

- **அரச அலுவலர்களை வலுப்படுத்தும் நோக்கில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக விசேட பங்களிப்புக்களை வழங்கும் விசேட ஜனாதிபதி செயலணி யினருக்கும் பொலிசாருக்கும் ஜனாதிபதியின் விசேட வாழ்த்து வழங்கல்.**

- **பிள்ளைகளைப் பாதுகாப்போம்- தேசிய செயற்றிட்டத்தின் தேசிய நிதியம் 2019.10.01 அன்று உலக சிறுவர் தினத்தையொட்டி ஆரம்பிக்கப்பட்டு நன்கொடையாளர்களின் பங்களிப்புடன் 17 மில்லியன் ரூபாய்கள் திரட்டப்பட்டது.**

- **மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் அரசியலமைப்பு 33(2)(ஈ) உப அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டனர்.**

- **மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பான பெறுபேறுகள்**

ஏதேனுமொரு அரச நிறுவனம் அல்லது அரச உத்தியோகத்தரின் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மக்களுடைய நலனுக்கு ஏதுவாக அமைவதுடன், மக்களுடைய பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காகவென உணரும் பட்சத்தில் விசாரணை ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய மேன்மைதங்கிய ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் நியமிக்கப்படும் ஆணைக் குழுத் தலைவர்களின் பரிந்துரைகளுக்கமைய துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- **2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாட்டின் சில பகுதிகளில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு**

2019.04.21 அன்று கொழும்பு கொச்சிக்கடை, நீர்கொழும்பு கட்டுவாபிட்டி மற்றும் மட்டக்களப்பு போன்ற தேவாலயங்களிலும் கொழும்பிலுள்ள சில பிரபல நட்சத்திர ஹோட்டல்களிலும் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன், முழுமை யாக ஊனமுற்றவர்கள், காயப்பட்டவர்கள் மற்றும் சொத்துச் சேதங்கள் போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு குறித்த தாக்குதல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுப்பதற்கு மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் இவ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதுடன்,அதற்கமைவான சட்ட ஏற்பாடுகள் தொடர்பான பரிந்துரைகளை ஜனாதிபதியின் செயலாளருக்கு சமர்ப்பித்தல்.

### ➢ புத்தாக்கங்களை ஊக்குவித்தல்

புதிய உற்பத்திகள் மற்றும் ஆய்வுகளை ஊக்குவித்து நாடென்ற ரீதியில் முன்னோக்கிச் செல்வதற்குள்ள தடைகளை கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக தேசிய புத்தாக்க முகவர் நிறுவனச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அங்கு சமூக மட்டத்திலான புத்தாக்கங்கள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் புத்தாக்கங்கள், பாதுகாப்பு புத்ததாக்கங்கள், சுற்றாடல் புத்தாக்கங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான புத்தாக்கங்கள் பொருளாதாரத்திற்கு அவற்றால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக மிகவும் சிறந்த தெளிவை ஏற்படுத்தல். புத்தாக்கங்களுக்கமைய தேசிய கொள்கைகளை வகுப்பதற்காக அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை மேற்கொள்வதையே எதிர்பார்க்கப்படுகின்றது.

### ➢ போதைப்பொருள் தொடர்பான ஆலோசனைச் சபை

போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டவர்களைப் புனர்வாழ்வளித்தலை முறைப்படுத்து வதற்காக தேவையான ஆலோசனைச் சபையை உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அங்கு ஆலோசனைச் சபைக்குச் சட்ட ரீதியான அதிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தேவையான சட்டவரைபு சட்டமூல வரைஞர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கு வதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

வழக்குகள் தொடர்பான சுருக்கம்

| | | |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு முன்கொண்டு வரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | - | 83 |
| 2019 ஆம் ஆண்டுக்கான வழக்குகளின் எண்ணிக்கை | - | 41 |
| மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | - | 124 |

| மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 2019 இல் முடிவுற்ற வழக்குகளின் எண்ணிக்கை | தொடர்ந்தும் விசாரணையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|
| 124 | 33 | 91 |

## 5. பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புப் பிரிவு

| விசேட சுட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதம் (%) அமைவான உண்மையான வெளியீடுகள் | | |
|---|---|---|---|
| | **100%-90%** | **75%-89%** | **50%-74%** |
| சிறிய நீர்ப்பாசன மறுசீரமைப்புக்களைத் துரிதப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் குளத்தொகுதிகளுக்குரிய 07 குளங்கள் மற்றும் 02 அணைகள் மறுசீரமைத்தல், விவசாயக் கிணறுகள் 20 மறுசீரமைத்தல், 48 குளங்களில் நீரியல் தாவரங்கள் அகற்றுதல் | **100%-90%** | | |
| விவசாயப் பண்ணைகளை இயந்திரமயமாக்கல், புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல், வர்த்தக விவசாயத் திட்டம் மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழில் மேம்படுத்தல். (இலகு விவசாய உபகரணங்கள், பொலிடனல், நீர்ப்பம்பி, 2247 சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் போன்றன வழங்கல் நன்னீர் மீன்வளர்ப்புக்காக 52.69 இலட்ச மீன் குஞ்சுகள் விடப்பட்டன) | | **75%-89%** | |

| விசேட சுட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதம் (%) அமைவான உண்மையான வெளியீடுகள் | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| மாற்று எரிசக்தி முறையை விவாசாயத் துறையில் ஊக்கு விப்பதற்காக 150 சூரிய மின்கலத் தொகுதிகள் வழங்கல். | | 75%-89% | |
| வனவிலங்குகளின் தாக்கங்களைக் குறைப்பதற்காக 1377 வாயுத் துவக்குகளும் விவசாய வேலிகள் மற்றும் மின்சார வேலிகள் அமைத்தல். | 100%-90% | | |
| இயற்கை வேளாண்மை செய்கையை ஊக்குவிப்பதற்காகவும் அதற்குத் தேவையான விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை நடாத்துதல். | 100%-90% | | |
| மேலதிக உணவுப்பயிர் ஊக்குவிப்பு, (2141.8 ஏக்கர்கள்) தரிசு வயல்கள் விதைத்தல், (540.25 ஏக்கர்கள்) பயிரிடப்படாத காணி அபிவிருத்தி | 100%-90% | | |
| அறுவடையின் பின்னரான பாதிப்புக்களைக் குறைப்பதற்காக சிறிய வெங்காய விதைகளைக் களஞ்சியப்படுத்தல் விதை மடுவங்கள் 224 அமைத்தல். | 100%-90% | | |

## 6. மக்கள் தொடர்பாடல் பிரிவு

| விசேட சுட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதத்திற்கமைய உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் மக்கள் வேண்டுகோள்கள் தொடர்பாக நடவடிக்கையெடுத்தல் | 100% | - | - |
| கௌரவ அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், ஆளுநர்கள், மாகாண,மாவட்ட, பிரதேச சபைகள் மட்டத்தில் மேலெழும் மக்களுடைய பிரச்சினைகளை விசாரித்தலும் முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அதேபோல் பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் மட்டத்திலான மக்களுடைய பிரச்சினைகளுக்கு பயனுள்ள தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல். | 100% | - | - |
| பிரதேச ரீதியாக மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அப்பிரச்சினைகள் ஏற்படுவதற்கான மூலகாரணங்களை ஆராய்ந்து அமைச்சு ரீதியாக அதற்கான பொருத்தமான பொறிமுறையை தயாரித்து மேற்கொள்ளல். | 100% | - | - |
| மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு மக்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து மூன்று மாதங்களுக்கொருமுறை ஏற்புடைய அமைச்சுக்களுடன் தலையிட்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தெளிவுபடுத்தி தீர்வு காண்பதற்கு ஒத்துழைத்தல். | 100% | - | - |
| அரச நிறுவனங்கள் மக்களுடன் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக வழிகாட்டியாக தேசிய கொள்கையைத் தயாரித்தல் | 100% | - | - |
| மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மக்கள் தொடர்பாடல் பிரிவு உத்தியோகத்தர்களுடன் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் நடாத்துதல் | 100% | - | - |
| அமைச்சுக்கள், மாகாண சபை மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகளிடம் மக்கள் குறைகேள்கள் வேண்டுகோள்கள் தொடர்பான முன்னேற்றங்களைக் கேட்டறிதல் | 100% | - | - |
| நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைய மக்களுடைய கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கிராமிய மட்டத்திலான நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் தெளிவுபடுத்தல் மற்றும் தெரியப்படுத்தல். | 100% | - | - |

## 7. நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு

**உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள்**

